IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 48/2015 |
| | | D/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Muruganantham | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **14-09-2022**

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) : 14-09-2022**

நீங்கள் எதுவரை படித்துள்ளேன் என்றால் B.Sc பாதி வரை படித்துள்ளேன். உங்களுடைய பூர்வீக ஊர் எதுவென்றால் தேவக்கோட்டை ஆகும். நான் மேட்டுநீரேத்தானில் வசித்து வரும் சுப்பையா என்பவரின் மகளான பிரதிவாதியான ராஜேஸ்வரி என்பவரை திருமணம் செய்துள்ளேன். நீங்கள் என்ன தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் வாடிப்பட்டியில் எலக்ட்ரானிக்ஸ் கடை கடந்த 15 வருடங்களாக வைத்து தொழில் செய்து வருகிறேன். நீங்கள் முதன்முதலாக தாவா சொத்திற்கு அருகில் உள்ள சுப்பையா சேர்வை என்பவரின் வீட்டில் கடந்த 15 வருடங்களுக்கு முன்பு வாடகைக்கு குடிவந்தீர்கள் என்றால் ஆம். தாவா சொத்தான சர்வே எண்.558ல் 10 உட்பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். ஆகையினால், தாவா சர்வே எண்.558 சொத்தை பொறுத்து உட்பிரிவு செய்யப்பட்ட அனைத்து சொத்துக்களின் விபரங்களும் உங்களுக்கு நன்றாக தெரியும் என்றால் அவ்வாறு இல்லை. என்னுடைய சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்கள் பற்றி தெரியும். சர்வே எண்.558 உட்பிரிவு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் பூஸ்துதியில் கடந்த 100 வருடங்களுக்கு மேலாக குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்ட இடம் என்று சொன்னால் ஒரு 50 அல்லது 60 வருடங்கள் இருக்கலாம். நீங்கள் குடியிருந்து வரக்கூடிய வீடு மட்டும் தான் சமீபத்தில் விலைக்கு வாங்கி வீடு கட்டிய புது வீடு என்றால் ஆம்.

சாட்சியிடம் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை காட்டி அதில் சொத்து விபரத்தில் நான்கெல்லையில் கிழக்கே தென்வடல் வீதி, வடக்கே கருப்பு சேர்வை வகையறா வீடு, தெற்கே கருப்பையா சேர்வை வீட்டிற்கும் பழனிசாமி வீட்டிற்கும் சந்துக்கும் தெற்கு, மேற்கே சேவுகன்சேர்வை வீட்டுக்கும், R.சுப்புசேர்வை வீட்டிற்கும் சந்துக்கும்

என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி மேலும், என்னுடைய குடியிருப்பு வீட்டுக்கும் கிழக்கு சந்து அமைந்துள்ளது. சந்திற்கு அடுத்து கிழக்கே சேவுகன்சேர்வை என்பவரின் வீடு உள்ளது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள நான்குமாலில் கிழக்கே சேவுகன்சேர்வை வீடும், R.சுப்பையாசேர்வை வீடும் சந்துக்கும் கிழக்கே என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு என்னுடைய வீட்டிற்றும் சந்திற்கும் அடுத்து சேவுகன் சேர்வை வீடு அமைந்துள்ளது. பி.வா.சா.ஆ,2ல் நான்குமாலில் கிழக்கே சேவுகன்சேர்வை வீடும், R.சுப்பையாசேர்வை வீடும் சந்துக்கும் என்று தான் உள்ளது என்றால் பத்திரத்தில் அவ்வாறு உள்ளது.

சர்வே ண்.558ல் உட்பிரிவு செய்யப்பட்டவைகளில் சர்வே எண்.558/4 பாண்டியராஜன் வீடு என்றால் சரிதான். மேற்படி என்னுடைய குடியிருப்பு வீடான சர்வே எண்.558/5க்கு வடக்கே பாண்டியராஜன் நாடார் குடியிருப்பு வீடு உள்ளது. உங்களுடைய குடியிருப்பு வீடான சர்வே எண்.558/5க்கு கிழக்கே சர்வே எண்.558/4ல் பாண்டியராஜன் நாடார் வீடு, சர்வே எண்.558/7ல் சேவுகன்சேர்வை வீடும், சர்வே எண்.558/8ல் சேவுசேர்வை வீடும், சர்வே எண்.558/11ல் சுப்புசேர்வை ஆகியோர்களது வீடும் அமைந்துள்ளது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. என்னுடைய வீட்டுக்கும் கிழபுறம் சந்து அமைந்துள்ளது. மேற்படி சந்துக்கு அடுத்து கிழக்கே தான் சேவுகன் சேர்வை, சேவுசேர்வை வீடு, சுப்புசேர்வை வீடு ஆகியோர்கள் வீடுகள் அமைந்துள்ளது. நீங்கள் சொல்வதுபோல் உங்களுடைய குடியிருப்பு வீட்டிற்கு கிழபுறம் சந்து உள்ளதாக குறிப்பிடுவது பொய். அவ்வாறு சந்து எதுவும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்யப்பட்டதற்கு பின்னிட்டு உங்களால் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்றால் ஆம். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு உங்கள் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆம் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு உங்கள் தரப்பில் மறுஆணையர் நியமனம் கோரி ஏதேனும் மனு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. உங்களுடைய குடியிருப்பு வீட்டிற்கு கிழபுறம் உள்ள சந்தாக உங்களால் சொல்லக்கூடிய சந்தானது யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சர்வே எண்.558ல் உள்ள அனைத்து உரிமையாளர்களும் சந்தை புழங்கி கொண்டு வருகிறார்கள். நீங்கள் சொல்வதுபோல்

சந்து ஏதும் கிடையாது. அனைவரும் புழக்கதில் புழங்க கிடையாது வழக்கிற்காக கிழபுறம் சந்து உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் அது சரியல்ல. சுப்புசேர்வை குடியிருக்கும் வீடு முழுவதும் அவரால் கட்டிடம் கட்டப்பட்டுவிட்டது என்றால் அது சரியல்ல. மேற்படி சுப்புசேர்வை வீட்டிற்கு மேல்புறம் சந்து உள்ளது. அவ்வாறு சுப்புசேர்வை வீட்டிற்கு மேல்புறம் சந்து உள்ளது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. சுப்பு சேர்வை வீட்டிற்கு பின்புறத்தில் இருந்து தெற்கு பக்கம் வருவதற்கு பாதை கிடையாது என்றும், உங்களால் பாதை உள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் அவ்வாறு சொல்வது சரியல்ல. பாதை உள்ளது. தாவா சொத்து ஆதியில் சேவுகன் சேர்வை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். சேவுகன் சேர்வை பெயரில் ஆதியில் தாவா சொத்திற்கு பட்டா இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. சுப்புசேர்வை வீட்டிற்கு தெற்கே எந்த வீடும் கிடையாது. பைபாஸ் ரோடு தான் உள்ளது.

சர்வே எண்.558/7ல் வாதிகள் அவர்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி தவறான முறையில் பட்டா பெற்றுள்ளதாக உங்களுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு சந்து பகுதியில் பட்டா வாதிகள் பெயரில் ஏற்படுத்தி கொண்டுள்ளதாக உங்களால் எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதை பொறுத்து, உங்கள் தரப்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றால் வருவாய் துறையில் மனு கொடுக்கப்பட்டும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பதில் பெறப்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. நீங்கள் சொல்வதுபோல், அவ்வாறு எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் தான் நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது சரியல்ல. அவ்வாறு நீங்கள் சொல்வதுபோல் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடுகிறீர்கள் என்றால் சரியல்ல.

உங்களால் கிரையம் பெறப்பட்ட உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்த பழனிக்குமார் அவர்கள் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக பழனிக்குமார் வகையறாவால் அனுபவம் செய்யப்பட்டு வந்த சொத்து என்றால் சரிதான். மேற்படி பழனிக்குமார் அவர்களிடம் இருந்து உங்களால் கிரையம்

வாங்கப்பட்ட உங்களது குடியிருப்பு வீட்டிற்குண்டான சொத்தை பொறுத்து சந்து பகுதியாக சொல்லக்கூடிய பகுதியை குறித்து பொது சந்தாக சொல்லியுள்ளார்களா என்றால் என்னுடைய சொத்திற்கு பின்பகுதியான கிழபுறம் சந்து தான் என்று பழனிக்குமார் சொல்லி எனக்கு கிரையம் செய்து கொடுத்தார். பொது சந்து என்று சொல்லவில்லை. சாட்சி மீண்டும் மேற்படி சந்தை பொது சந்து என்று தான் அனைவராலும் பயன்படுத்தக்கூடிய சந்தாக தான் பழனிக்குமார் சொல்லி எனக்கு கிரையம் செய்து கொடுத்தார். உங்களுடைய கிரைய பத்திரத்தில் கிழபுறம் பொது சந்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். உங்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில் பாரா 17ல் வாதிகளால் அவர்களுடைய பெருக்கு பட்டா உரிமை மாற்றம் ஏற்படுத்தி கொள்ளப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளீர்கள், அவ்வாறு வாதிகளுக்கு முந்தைய கிரையதாரர்களான சேவுகன்சேர்வை அவர்களுக்கு எவ்வளவு விஸ்தீரணத்தில் பட்டா உள்ளதோ அந்த அளவிற்கு தான் வாதிகளால் பட்டா உரிமை மாற்றம் ஏற்படுத்தி கொண்டுள்ளார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகள் பெயரில் உள்ள பட்டா நாளது தேதி வரை பார்த்துள்ளீர்களா என்றால் பார்க்கவில்லை. ஆனால் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்குண்டான அளவீடுகள் தொடர்பான வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேன். அவ்வாறு உங்களால் பார்க்கப்பட்ட அளவீடுகள் சேவுகன்சேர்வை அவர்களால் அதிக அளவீடுக்கு பட்டா பெற்றுள்ளார்களா என்றால் அதிக அளவிற்கு பட்டா அளவீடுகள் பெற்றுள்ளார்கள். சாட்சி மீண்டும் வருவாய் துறையினர் அதிக அளவிற்கு பட்டா கொடுத்துள்ளார்களா என்று எனக்கு தெரியவில்லை என்று சாட்சியம் அளித்தார். ஆகையினால், வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்குண்டான பட்டா அளவீடுகள் குறித்து உங்களால் தெரிந்து கொள்ளப்படவில்லை என்றால் அது சரியல்ல.

சுப்புசேர்வை வீட்டிற்கு அடுத்து தெற்குபுறம் பல வீடுகள் கடந்து தான் பைபாஸ் ரோடு உள்ளது என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல. நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகள் வீட்டிற்கு மேற்கு புறம் சந்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி சந்து என்பது தென்வடலாக செல்கிறது என்றால் சரிதான். மேற்படி தென்வடல் சந்தில் பல நபர்கள் குடியிருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். உங்களுடைய வீட்டை கட்டுவதற்காக வங்கியில் அடமானம் வைக்கப்பட்டதற்கான அடமான ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள அளவீடுகள் தொடர்பான நகல் ஆவணத்தை தாக்கல்

செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அடமானம் உங்களால் எழுதிகொடுக்கப்பட்ட பத்திரத்தில் அளவீடுகள் தொடர்பான விபரங்கள் அடமான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்பட்சத்தில் நீதிமன்றத்திற்கு தெரியவரும். அவ்வாறு அடமான பத்திர ஆவணத்தை உங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அடமான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அடமான பத்திர ஆவணத்தை தாக்கல் செய்திருந்தால் உண்மையான அளவுகள் எவவ்ளவு என்பது தெரிய வரும். அதனால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. உங்களுடைய குடியிருப்பு வீட்டின் பூச்சு வேலைப்பாடுகள் செய்யப்படவில்லை என்றால் சரிதான். உங்களுடைய குடியிருப்பு வீடு கிழமேல் 40 1/2 அடி என்றால் சரிதான். ஆனால் நீங்கள் கட்டியுள்ள கட்டுமான அளவீடான கிழமேல் அளவு என்பது 42.3 அடி என்று சொன்னால் அது தவறு. நீதிமன்ற ஆணையரும் தன்னுடைய அறிக்கையில் கிழமேல் அளவு என்பது 42.3 அடி என்று சொல்லியுள்ளார் என்றால் இல்லை. அது தவறு. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் உங்களால் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சொல்லவில்லை.

தாவா சொத்து ஆதியில் சுப்பு சேர்வையும் சேவுகன் சேர்வையும் மாட்டுக்கொட்டகையாக பயன்படுத்தி வந்துள்ளார்கள். அது பற்றி உங்களுக்கு தெரியும் என்றால் அது சரியல்ல. தெரியாது. பொதுவாக சந்து என்பது எத்தனை அடி அகலம் மற்றும் நீளம் இருக்கலாம் என்றால் அனைவரும் பழங்க கூடிய விதத்தை பொறுத்து உள்ளது. 10 அடி இருக்கலாம். 15 அடி இருக்கலாம். வழக்கில் தாவா சந்து என்பது எவ்வளவு அளவீடு என்றால் 60 அடி நீளமும் 10 அடி அகலமும் உள்ளது. உங்களால் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு வீட்டிற்குண்டான வாடிப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட கட்டிட அனுமதி வரைபடம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் என்னிடம் உள்ளது. தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் நான் தாக்கல் செய்ய தயராக உள்ளேன். கட்டிட அனுமதி வரைபடத்தை தாக்கல் செய்தால் அதில் அளவீடுகள் குறித்து உண்மை விபரம் தெரியும் என்பதினால் உங்களால் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

தாவாவில் பொதுசந்தாக உள்ளதை பொறுத்து ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்திட உங்கள் தரப்பில் தாவா சொத்திற்கு அருகில் உள்ள குடியிருப்பு நபர்களுடைய பத்திர ஆவணங்களை கொண்டு சந்து பகுதியை நிரூபணம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. சந்தாக தான் பூஸ்துதியில் உள்ளது.

உங்களுடைய வீட்டிற்கு தெற்கு கருப்பு வகையாறா மற்றும் தவமணி சேர்வை ஆகியோர்கள் வீடுகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி கருப்பு வகையறா மற்றும் தவமணி சேர்வை ஆகியோர்கள் வீடுகளுக்கு பின்புறம் உள்ள மேற்கு பகுதியில் கதவு ஜன்னல் போன்றவை இல்லை என்று சொன்னால் அது தவறு. கிழபுறத்தில் தான் கதவு ஜன்னல் ஆகியவை உள்ளது.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி